# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2016 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம்*

---

*(2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


*2016, நவெம்பர் மாதம் 11 ஆம் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா *14.00*** **தபாற் செலவு : ரூபா *10.00***

## 2016 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம்

[2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

*ச. வ. ஓ. 28/2016*

## 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், இதன்கீழ் வெவ்வேறு நடைமுறைக்கு வரும் தேதிகள் குறித்துரைக்கப்பட்டாலொழிய, 2016, நவெம்பர் 1ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும். சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**2.** இரண்டாயிரத்துப் பதினைந்தாமாண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதும், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :- 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அவ்வுட்பிரிவின் (iii) ஆம் பந்தியில் –

(அ) அதன் (ஆ) என்னும் உட்பந்தியில், "ஆனால் 2015, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் முடிவுறும் அத்தகைய இயைபான காலாண்டாயிருப்பின் முப்பது இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத தொகை ; அத்துடன்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "ஆனால் 2015, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் முடிவுறும் அத்தகைய இயைபான காலாண்டாயிருப்பின் முப்பது இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத தொகை"; என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

2-PL 010182 - 961 (2016/09)

(ஆ) அதன் (இ) என்னும் உட்பந்தியில், "2015, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டின் அத்தகைய இயைபான காலாண்டாயிருப்பின் முப்பது இலட்சத்து எழுநூற்று ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு மேற்படாத தொகை;'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2015, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டின் அத்தகைய இயைபான காலாண்டாயிருப்பின் முப்பது இலட்சத்து எழுநூற்று ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு மேற்படாத தொகை; அத்துடன்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ;

(இ) அதன் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(ஈ) அத்தகைய இயைபான காலாண்டு 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டாயிருப்பின் முப்பது இலட்சம் ரூபாவான பணத்தொகை:

ஆயின், 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற காலாண்டுக்காக எந்த ஆளின் பொறுப்பாக்கப்படக்கூடிய மொத்த விற்பனை வரவு முப்பது இலட்சம் ரூபாவை விஞ்சுவதுடன் முப்பது இலட்சத்து எழுநூற்று ஐம்பதினாயிரம் ரூபாவான பணத் தொகையை விஞ்சாதுள்ளதோ அந்த எவரேனுமாளின் விடயத்தில்,

அத்தகைய ஆளுக்கு 2016, மே 2 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2016, யூலை 11 ஆந் தேதிக்கு முன்னர், மற்றும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று அல்லது அதன்பின்னர் திரண்ட பொறுப்பாக்கப்படக்கூடிய மொத்த விற்பனவு வரவின்மீது மட்டுமே வரிவிதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்;"; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (iv) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(iv) அத்தகைய காலாண்டு -

(**அ**) 2011, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற காலாண்டாயிருப்பின், மற்றும் -

(அ) ஒரு ஹோட்டலை, அதிதி மனையை, சிற்றுண்டிச்சாலையை அல்லது வேறு ஒத்த தொழிலை நடாத்துவதிலிருந்து ;

(ஆ) விற்பனைக்காக ஆயத்தஞ் செய்வதில் உள்நாட்டில் பெறப்பட்ட ஏதேனும் கமத்தொழில்சார் உற்பத்திப் பொருளைப் பதனிடுவதிலிருந்து ;

(இ) அந்நோக்கத்துக்காக உள்நாட்டில் தாபிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்தினால் கல்விச் சேவைகள் வழங்கப்படுவதிலிருந்து ; அல்லது

(ஈ) தொழிலாளரை (மனித வலுவை) வழங்குவதிலிருந்து,

அத்தகைய ஆளின் பொறுப்பாக்கப் படக்கூடிய மொத்த விற்பனவுவரவு இருபத்தைந்து மில்லியன் ரூபாவான பணத்தொகையை விஞ்சாதிருப்பின் :

ஆயின், 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற காலாண்டுக்காக உட்பந்திகள் (அ), (இ) மற்றும் (ஈ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் தொழிலிலிருந்து எந்த ஆளின் பொறுப்பாக்கப்படக்கூடிய மொத்தவிற்பனவுவரவு முப்பது இலட்சம்ரூபாவை விஞ்சுவதுடன் இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாதுள்ளதோ அந்த எவரேனும் ஆளின் விடயத்தில், அத்தகைய ஆளுக்கு 2016, மே 2 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2016, யூலை 11 ஆந் தேதிக்கு முன்னர், மற்றும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று அல்லது அதன்பின்னர் திரண்ட பொறுப்பாக்கப்படக்கூடிய மொத்த விற்பனவு வரவின் மீது மட்டுமே வரி விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும் ;

(**ஆ**) 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற காலாண்டாயிருப்பின் மற்றும் விற்பனைக்காக ஆயத்தம் செய்வதில் உள்நாட்டில் பெறப்பட்ட ஏதேனும் கமத்தொழில்சார் உற்பத்திப் பொருளைப் பதனிடுவதிலிருந்து அத்தகைய ஆளின் மொத்த விற்பனவுவரவு இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாதிருப்பின்;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** இரண்டாயிரத்தொன்பதாம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலம் மேலும் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

*“(உ) வரிமதிப்பீடு அல்லது மேலதிக வரிமதிப்பீடெதுவும்–*

(i) *2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டர சிறைச் சட்டத்தின் 106 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (7) ஆம் உட்பிரிவின்கீழ் அவரது வருமானம்பற்றிய விபரத்திரட்டு கொடுத்து வப்பட்டிருப்பின், இப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் வரிமதிப்பீட்டாண்டில் இயைபான காலாண்டுக்காக, அத்தகைய இயைபான காலாண்டு எந்த வரிமதிப்பீட்டாண்டில் வருகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் வரிமதிப்பீட்டாண்டின் நவம்பர் 30 ஆம் நாளிலிருந்து பதினெட்டு மாதங்கள் முடிவுற்றபின்னர் அவ்விபரத்திரட்டைக் கொடுத்துதவியுள்ளவரான ; அல்லது*

(ii) *அத்தகைய இயைபான காலாண்டு எந்த வரிமதிப்பீட்டாண்டினுள் வருகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் வரிமதிப்பீட்டாண்டின் நவம்பர் முப்பதாம் நாளிலிருந்து நான்காண்டுகள் முடிவுற்றபின்னர், இப்பிரிவின் (ஈ) என்னும் பந்தி யில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அவ்விபரத் திரட்டைக் கொடுத்துதவத் தவறியுள்ளவரான,*

*எவரேனுமாள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் செய்யப்படுதலாகாது.”.*

முதன்மைச் சட்டவாக் கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

**4**. இரண்டாயிரத்துப் பதினைந்தாமாண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வட்டவணையின் பாகம் I இல் :-

(அ) அதன் (xi) ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :-

"(xi) 2016, மே 2 ஆந்தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக, மற்றும் 2016, யூலை 11 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று அல்லது அதன் முன்னர் முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்காக, சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபாரப்பொருள் விவரணம் மற்றும் கோவையிடும் இலக்கங்களின்கீழ் வகுப்பாக்கம்செய்யப்பட்ட பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய உற்பத்திப் பொருள்கள்;"; அத்துடன்

(ஆ) அதன் (xvi) ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :-

"(xvi) நாட்டுக்கான பொருளாதார நன்மையைக் கவனத்துட்கொண்டும் மற்றும் அரசாங்கத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டு நிதிகளிலிருந்து அல்லது நன்கொடைகளிலிருந்து கொண்டு நடாத்தப்படும், 2016, மே 2 ஆந் தேதிக்கு முன்னர், மற்றும் 2016, யூலை 11 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று அல்லது அதன் முன்னர் முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்காக அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டவாறு, ஏதேனும்வீடமைப்புக் கருத்திட்டம் தவிர்ந்த, குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்துக்கு இறக்குமதி செய்யப்பட்ட அல்லது வழங்கப்பட்ட எவையேனும் பண்டங்கள் ;";

(2) அவ்வட்டவணையின் பாகம் II இல்-

(அ) அதன் (ii) ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :-

"(ii) 2016, மே 2 ஆந்தேதிக்கு முன்னர் முடிவடைந்த ஏதேனும் காலப்பகுதிக்காக மற்றும் 2016, யூலை 11 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று அல்லது அதன்முன்னர் முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்காக மின்சாரம் வழங்குதல்;"; அத்துடன்

(ஆ) அதன் (xxviii) ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :-

"(xxviii) 2016, மே 2 ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைந்த ஏதேனும் காலப்பகுதிக்காக, மற்றும் 2016, யூலை 11 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று அல்லது அதன்முன்னர் முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்காக, 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத்தொடர்புகள் அறவீட்டுச் சட்டத்தின் கீழான தொலைத் தொடர்புகள் அறவீட்டுக்குப் பொறுப்பாக்கப்படக்கூடிய தொலைத் தொடர்புச் சேவைகளும், அச்சட்டத்தில் தொலைத் தொடர்புச் சேவைகளுக்கு வரைவிலக்கணம் கூறுவதில் அத்தகைய பொறுப்பிலிருந்து விசேடமாகத் தவிர்க்கப்பட்ட சேவைகளும் ;".

*செல்லுபடியாக்குதல்.*

**5**. விடயத்துக்கேற்ப, உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி அல்லது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி, முதன்மைச் சட்டவாக்கத்தின் முறையே 4 ஆம் பிரிவின் அல்லது 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எந்த ஆளுக்கு ஏற்புடையனவோ அந்த ஆளொருவரிடமிருந்து, 2016, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப் பகுதியின்போது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கவனத்துட் கொண்டு கணக்கிடப்பட்ட வரியைச் சேகரிக்குமிடத்து, அத்தகைய சேகரிப்பு, எல்லா நோக்கங்களுக்காகவும், செல்லுபடியான முறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், இப்பிரிவின் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள், மேற்கூறப்பட்ட காலப்பகுதியின்போது சேகரிக்கப்பட்ட ஏதேனும் வரி தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிபை அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள ஏதேனும் வழக்கு நடவடிக்கையைப் பாதித்தலாகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**6**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்